www.dreamrealitytuition.com www.dreamrealitytuition.com

11 R

நேரம் : 3.00 மணி

# காலாண்டுத் தேர்வு - 2022

Reg. No.

# தமிழ்

மதிப்பெண்கள் : 90

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 14 x 1 = 14

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவேண்டும்.**

1. பாயிரம் இல்லது..........அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
அ) முத்துலிங்கம் – யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் – நன்னூல் இ) சு. வில்வரத்தினம் – ஆறாம்திணை
ஈ) இந்திரன் – பேச்சு மொழியும் கவிதை மொழியும்
3. காவடிச்சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) கபிலர் ஈ) பாரதியார்
4. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, விகுதி, சந்தி ஈ) பகுதி, விகுதி
5. துன்பப்படுபவர்..........
அ) தீயக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர் இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவை அடக்காதவர்
6. ஒப்புரவு என்பதன் பொருள்...........
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது
7. ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள்...........
அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்
8. 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்..........
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
9. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை.........
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 26
10. அனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு இ) தலைமைத்துவிபாஷி இலக்கியத்தின் தந்தை ஈ) உலக நாட்குறிப்பு
11. உறுபகை, இடன் – ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு
அ) உரிச்சொல் தொடர், ஈற்று போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர் இ) வினைத்தொகை, ஈற்றுப்போலி
ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை
12. நெரொன்றியஆசிரியத்தளை என்பது.............
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
13. அச்சு – இச்சொல் எவ்வகை குற்றியலுகரம்............
அ) உயிர்த்தொடர் குற்றியலுகரம் ஆ) வன்தொடர் குற்றியலுகரம் இ) மென்தொடர் குற்றியலுகரம் ஈ) இடைதொடர் குற்றியலுகரம்
14. வான் பொய்த்தது – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்
அ) வானம் இடித்தது ஆ) மழை பெய்யவில்லை இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் பொய்யானது

## பகுதி - II பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு பதில் தருக :** 3 x 2 = 6

15. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோபோயின – தொடரின் பொருள் தருக.
16. இனம் மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
17. தமிழர்கள் புகழ் பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
18. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு பதில் தருக :** 2 x 2 = 4

19. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்திமிக்கது ஏன்?
20. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.
21. உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக :** 7 x 2 = 14

22. வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக. அ) சங்கீதம் ஆ) சாகரம்
23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைக்க. உலை உளை உழை
24. இலக்கணக் குறிப்பு தருக : அ) உண்டல் ஆ) முலலா
25. புணர்ச்சி விதி தருக : – (ஒன்று மட்டும்) அ) திருப்புகழ் ஆ) அணிந்துரை
26. உறுப்பிலக்கணம் தருக : – (ஒன்று மட்டும்) அ) வருகின்ற ஆ) வைத்தார்



DREAM REALITY TUITION & TUTORIAL
DREAM REALITY NEET COACHING CENTRE | PLAY SCHOOL | TUITION & TUTORIAL, PERUMANALLUR, TIRUPPUR - CONTACT : 9942456409 | 7010632838.

27. சொல்லைப் பிரித்து சேர்த்தும் தொடரமைக்க. தங்கை
28. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்?
29. புதிர்களுக்கு விடைகளைத் தேர்ந்தெடுக்க.
அ) எலியும் நுழையும், எழிலரசி கையும் நுழையும்
ஆ) பூவின் உறுப்பும் நானே ; புன்னகையின் பிறப்பிடமும் நானே.
விடை : கம்பு, மை, வளை, மதி, இதழ்
30. ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.
அ) Shell seeds ஆ) Organic farming

## பகுதி - III பிரிவு - 1

**ஏதேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 x 4 = 8

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச் சிந்து என்பதை விளக்குக.
33. விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.
34. உள்ளுறை உவமை, இறைச்சி – எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 2 x 4 = 8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்கு சாத்தியமா? – உம் கருத்தை எழுதுக.
36. சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் – குறிப்பு வரைக.
37. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
38. மொழி முதல் இறுதி எழுத்துகள் யாவை? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக :** 3 x 4 = 12

39. பொதுவியல் திணை அல்லது குறிஞ்சித்திணையை விளக்குக.
40. பொருள்மொழிக்காஞ்சித்துறை அல்லது மனை மருட்சி துறையை விளக்குக.
41. இலக்கிய நயம் பாராட்டுக :

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன் ;
மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்.
– பாரதியார்

42. தமிழாக்கம் தருக :
அ) The pen is mightier than sword.
ஆ) A picture is worth a thousand words.
இ) Knowledge rules the world.
ஈ) Work while you work and play while you play.
43. தாய்மொழி வழிக் கல்வி பற்றிய உங்கள் எண்ணங்களைக் கவிதையாக்குக.

## பகுதி - IV

**இரண்டு பக்க அளவில் விடை தருக :** 3 x 6 = 18

44. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
**(அல்லது)**
தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?
45. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' – தலைப்பில் உரையை உருவாக்குக.
**(அல்லது)**
தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் – நிறுவுக.
46. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.
**(அல்லது)**
பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

## பகுதி - V

**அடிபிறழாமல் எழுதுக :** 4 + 2 = 6

47. அ) ஆக்கியோன் பெயரே .... எனத் தொடங்கும் நன்னூல் பாடலையும்
ஆ) .... வடு என முடியும் திருக்குறளையும் எழுதுக.



DREAM REALITY TUITION & TUTORIAL

DREAM REALITY NEET COACHING CENTRE | PLAY SCHOOL | TUITION & TUTORIAL, PERUMANALLUR, TIRUPPUR - CONTACT : 9942456409 | 7010632838.